1974 சனவரி 23]

இன்றார்கள் என்றே தெரிகின்றது. அதற்காக இந்தக் குருக்கள்மார்களும் பூசாரிகளும், கோவில்களில் தூப தீப நைவேத்தியங்களைச் செய்யும்போது, ஒளி நிறைந்த விளக்குகளை ஏற்றி அச்சிலைகளை ஃபோட்டோ எடுப்பதற்கான வழி முறைகளைக்கூடச் செய்து கொடுக்கின்றார்கள் என்றும் ஃபோட்டோ எடுத்தபிறகு அவைபோன்ற சிலைகளைச் செய்தபிறகு அவை மாற்றப்படுகின்றன என்றும் இப்படிப்பட்ட குற்றங்களைப்பற்றி ஆராயும்போது தகவல்கள் வருகின்றன. ஆகவே சிற்பிகளைக் கட்டுப்படுத்துவதால் மட்டும் போதாது, அர்ச்சகர்களையும் கட்டுப்படுத்த வேண்டியிருக்கின்றது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, இப்படி வெளிநாட்டில் ஒரு சிலை ரூபாய் 50 லட்சம், ரூபாய் 60 லட்சம் என்று விற்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது ரூபாய் 50 லட்சத்துக்குப் போகும் சிலையை இங்கே தயாரிப்பதற்கு உத்தேசமாக எவ்வளவு 'காஸ்ட் ப்ரைஸ்' ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தயவுசெய்து இப்படிப்பட்ட லாப-நஷ்டக் கணக்கையெல்லாம் இதில் பார்க்க வேண்டாம், அது ஆபத்தானது. அதை ஊக்குவிப்பதுபோலாகிவிடும்.

New Scales of pay to the Temple Staff working in Srirangam Temple.

@ * 14. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased state—

(*a*) whether the Government are aware of the fact that the new scales of pay have not been implemented in the case of the temple staff working in Srirangam Temple; and

(*b*) if so, the action taken thereon by the Government?

@ * 19–1–1974-ம் தேதி வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது

[1974 சனவரி 23

திருவரங்கம் கோயில் பணி செய்யும் ஆலய ஊழியர்களுக்குப் புதிய ஊதிய உயர்வு

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவரங்கம் திருக்கோயிலில் பணி செய்யும் ஆலய ஊழியர்களுக்குப் புதிய ஊதிய உயர்வு நடைமுறைப்படுத்தப் பெறவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) திருவரங்கம் திருக்கோயில் ஊழியர்களுக்குப் புதிய சம்பள விகிதம் 1—3—1973 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு, ஆகஸ்ட் 1973ல் வழங்கப்பட்டுள்ளன.

(பிற்பகல் 5-00)

திரு. காட்டூர் கோபால் : தலைவரவர்களே, இந்தப் புதிய ஊதிய உயர்வினால் தமிழ் நாடு முழுவதும் எவ்வளவு ஊழியர்கள் பலன் பெற்றிருக்கிறார்கள். அதனால் எவ்வளவு செலவாகியிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்தப் புதிய ஊதிய உயர்வின் மூலம் சுமார் 50 ஆயிரம் ஊழியர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள். கூடுதலாகச் செலவு சுமார் 60 லட்சம் ரூபாய்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, திருவரங்கம் திருக்கோவிலில் அரங்கர் சிற்றங்காடி என்று மினி சூபர் மார்க்கெட் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கே பணியாற்றுகிற ஊழியர்களுக்கு இந்தப் புதிய சம்பள விகிதம் பொருந்துமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அவர்கள் கோவில் ஊழியர்களா அல்லது கூட்டுறவுத் துறை ஊழியர்களா என்பதுபற்றித் தகவல் எனக்குத் தெரியவில்லை. கோவில் ஊழியர்களாக இருந்தால், இந்தச் சம்பள விகிதம் அவர்களுக்கும் பொருந்தும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : வினா 15-ஐ நான் போட விரும்பவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]